1365/3

Regd. No. M. 2419.



27 FEB 1935

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| | | |
|---|---|---|
| **Vol. 7** | பாவ ஸம்வத்ஸரம் | **No. 8.** |
| புஸ்தகம் 7 | மாக மாஸம்,<br>பௌர்ணமி (18-2-35) சோமவாரம். | நெ. 8. |



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம் (மத்வாசாரியார்) | 225 |
| 2. | விதவா விவாக கண்டனம் | 235 |
| 3. | ஸ்ரீமத்வ விஜயம். | 239 |
| 4. | சங்கரலீலா விலாஸம் | 242 |
| 5. | இக்த கிரஹண உபவாஸ ஸம்பந்தமான பிரமாணபரிசிலனை | 245 |
| | ...டு. | 251 |
| | ...ர்கள் | 256 |

...பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

208724

# கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பேஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள், ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்.

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India).

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்

---

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்

## வெகு சொற்பம் தானிருக்கின்றன.

## உடனே அவைகளைப்பெற

## முந்துங்கள்.

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

---

### இருபத்து ஒன்றாவது அத்தியாயம்

(ஸ்ரீமத். வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(காபிரைட், முன் 200-பக்கம் தொடர்ச்சி)

---

ருக்மணியை ஸ்ரீகிருஷ்ணர் தூக்கிக்கொண்டு வந்த சமயம் ஸால்வராஜன் ஸ்ரீகிருஷ்ணரால் பராஜயத்தை அடைந்து பூமியில் யாதவர்களின் முளையே இல்லாமல் செய்கிறேன் என்று சபதம் செய்து, ஒரு பிடி புழுதிமண்ணை வருஷத்திற்கொருமுறை பக்ஷித்துக்கொண்டு அநேக வருஷங்கள் தபஸ் செய்து ஸ்ரீகிருஷ்ணரை ஜயிக்கும் விஷயத்தில் பரமசிவனால் மீண்டும் வரனைப்பெற்று ஊருக்குவந்தான். அந்த ஸால்வன் இப்பொழுது ஜராஸந்தன் கொல்லப்பட்டுப் போனதையும் பாண்டவர்கள் செய்த திக்விஜயத்தையும் இந்த ராஜஸூயயாகத்தையும் ஸ்ரீகிருஷ்ணர் செய்த சிசுபால வதத்தையும் கேட்டு யாதவர்கள் விஷயத்தில் அவர்களை ஜயிக்க ப்ரயத்தனத்தை சீக்கிரம் செய்யப் போகிறான். என்றிவ்வாறு நாரதர் சொன்ன வார்த்தையை தர்ம புத்திரர் கேட்டுவிட்டு சந்திரபிம்பம் போன்ற ஸ்ரீகிருஷ்ணரின் முகத்தைக்கண்டார். அப்படியே வரட்டும், அவனால் என்ன

[illegible] என்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணர், ப்ரத்யும்னன் [illegible] யாதவர்களை முன்னாடியே துவாரகைக்கு அனுப்பித்தார். சில நாட்களுக்குப்பின் பலராமருடன் ஸ்ரீகிருஷ்ணர் துவாரகைக்கு பிரயாணம் செய்தார்.

ஸ்ரீகிருஷ்ணர் புறப்பட்டுப் போனபின் விதுரர் இந்திரப்ரஸ்தத்திற்கு சென்று தர்மபுத்திரரை சொக்கட்டான் ஆட்டத்திற்காக வென்று அழைத்தார். தர்மபுத்திரர் தம்பிமார்களாலும் தாயான குந்தியாலும் துரௌபதியாலும் தடுக்கப்பட்டும் இவர்களுடன் சீக்கிரம் த்யூதத்திற்காக ஹஸ்தினா நகருக்கு புறப்பட்டார். ஜ்யேஷ்டரான திருதராஷ்டிரரின் கட்டளையின்பேரில் விதுரன் தர்மபுத்திரரை வரும்படி அழைத்தாலும் சொக்கட்டான் ஆடுவதில் ஏற்படும் அநேக தோஷங்களைச்சொல்லி ஹஸ்தினாபுரத்திற்கு செல்லாதே என்று அறிவித்தார். சொக்கட்டான் ஆட்டத்தில் ஏராளமான தோஷங்கள் இருக்கின்றன. ஆயினும் உன் தந்தையான திருதராஷ்டிரன் சொக்கட்டான் ஆடவேண்டுமென்று சொல்லியுள்ளார். ஆகையால் உன் தந்தையின் வாக்கியத்தையும் சொக்கட்டான் ஆடுவதிலுள்ள தோஷங்களையும் யோசித்து, செய்ய வேண்டியது எதுவோ அதைச்செய். என்றிவ்வாறு விதுரர் சொல்லியும் தர்மபுத்திரர் கலிப்ரவேசமடைந்ததால் சைனியங்களுடன் திருதராஷ்டிரனிடம் வந்து சேர்ந்தார். தர்மத்தில் புத்தியுள்ள தர்ம புத்திரர் அவர் அஸ்திராப்யாஸம் செய்திருந்த காலத்திலேயே, கலிப்ரவேசத்தால், என்னை சொக்கட்டானுடை அழைக்கும் பக்ஷத்தில் யார் தடுத்த போதிலும் அந்த ஆட்டத்தினின்றும் நான் திரும்பமாட்டேன் என்று சபதம் செய்திருந்தார். ஆகவேதான் ஸுஹ்ருத்ஜனங்களால் தடுக்கப்பட்டபோதிலும் தர்மபுத்திரர் சீக்கிரமே ஹஸ்தினாபுரத்திற்குவந்தார். சொக்கட்டானுடும் மனுஷ்யனுக்கு தர்மம் ஏற்படாது. அதிலும் ஜனங்களுக்கு, தர்மத்தை [illegible] க்ஷத்திரியனுக்கு, சொக்கட்டான் விசேஷமாய் தர்மமே ஆகமாட்டாது. விசித்திர வீரியனின் மகனான திருதராஷ்டிரனால் பூஜிக்கப்பட்டவர்களான பாண்டவர்கள் அவருடைய அருகில் அன்று



இராத்திரி வசித்தனர். மறுநாள் காலையில் பீஷ்மாசாரியார் முதலான எல்லா ராஜார்களும் பாண்டவர்களுடன் சேர்ந்து சீக்கிரமே ஸபைக்கு வந்துசேர்ந்தனர். திருதராஷ்டிரர் விதுரனுடன் சேர்ந்து ஸ்பைக்கு வந்தார். சகுனி கர்ணன் இவர்களுடன் கூடிய திருதராஷ்டிர புத்திரர்களான துரியோதனாதிகள் சபைக்கு [illegible] சேர்ந்தார்கள். பிறகு ஸுபல ராஜனின் மகனான சகுனி [illegible]ப்பேர்பட்ட சபையில் தர்மபுத்திரரை சொக்கட்டானுடை அழைத்தான். அச்சபையில் பீமசேனர் முதலான நான்கு தம்பிமார்கள் குந்தி துரௌபதி விதுரன் இந்த ஏழுபேர்களைத் தவிர மற்ற எல்லோரையும் கலி ப்ரவேசம் செய்தான். கலிப்ரவேசம் செய்ததால்தான் பீஷ்மர் துரோணர் முதலியோர் குலநாசகமான சொக்கட்டான் ஆட்ட காரியத்தில் ப்ரவிருத்தித்த துரியோதனாதிகளை தடு[illegible]வில்லை. பீமசேனாதிகள் விதுரன் இவர்களால் தடுக்கப்பட்டவராயினும் தர்மபுத்திரர் தன் எல்லா சொத்துக்களையும் சொக்கட்டானுட்டத்தில் பந்தயம் வைத்து சொக்கட்டானின் மர்மத்தைத் தெரிந்திருந்த சகுனியால் தோல்வி அடைந்தார். பிறகு தர்மபுத்திரர் நகுலரைபந்தயம் வைத்தார். அவனும் தோற்கப்பட்டுபோனபின் ஸகதேவனை பந்தயம் வைத்தார். அவனும் தோற்கப்பட்டுபோனபின் அர்ஜுனனை பந்தயம் வைத்தார். அவனும் தோற்கப்பட்டுபோனபின் பீமசேனரை பந்தயம் வைத்தார். அவரும் பராஜயம் அடைந்தபின் துரௌபதியை பந்தயம் வைத்தார். துரௌபதியையும் வைத்து தோற்றுப்போனபின் தன்னையும் வைத்து ஆடி இவ்வாறு வரிசையாய் தோற்றுப் போனார். பிறகு துரியோதனன் துரௌபதியை அழைத்து வா என்று "ப்ராதிகாமி என்ற தன் ஸாரதிக்கு ஆக்ஞாயிட்டான். அவன் துரௌபதியின் அருகில் வந்து துரௌபதியே! சொக்கட்டான் ஆட்டத்தின் நடுவில் நீ பந்தயமாய் வைக்கப்பட்டு பராஜயம் அடைந்திருக்கிறாய். சீக்கிரம் அரசர்களின் உத்கிருஷ்டமான ஸமூகத்திற்கு வந்துசேர். என்று சொன்னான். அதற்கு அவள் நான் குருமார்களான பீஷ்மாதிகளின் கூட்டத்திற்கு வரமாட்டேன் என்று சொன்னாள். அந்த ஸாரதிசபைக்கு திரும்பிப்போனான். துரியோதனன் தன் ஸாரதி

பீமசேனருக்கு பயந்திருக்கிறான், என்று தெரிந்துகொண்டு தம் தம்பியான துச்சாசனனை துரௌபதியை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தான். பாப புருஷர்களின் தலைவனான துச்சாசனன் துரௌபதியின் தலைமயிரை பிடித்துக்கொண்டு அவள் மேல் உத்தரீய வஸ்திரமில்லாதிருக்க, அவளை தன் தாயான காந்தாரியின் எதிரில் சபைக்கு இழுத்துவந்தான். சபைக்கு இழுத்துக்கொண்டு வரப்பட்டவளான ரஜஸ்வலையான துரௌபதி பீஷ்மாதிகளைப்பார்த்து இவ்வாறு பேசினாள். தர்மிஷ்டர்களான உங்களைப்போன்றவர்களால் இந்த அதர்மம் தடுக்கப்படவில்லை மோசமாகிய இந்த த்யூதத்தில் ஜயித்தால் தர்மத்தால் ஜயித்ததாய் ஆகுமா. த்யூதம் என்பது தர்மத்திற்கு ஸாதனமென்று பெரியோர்கள் சொல்லவில்லை. விசேஷமாய் அரசர்களுக்கு சொக்கட்டான் தகாது. தர்மத்தை யார் எடுத்துச்சொல்ல தில்லையோ அவர்களுக்கு வ்ருத்தர்களென்று பிரசித்தி இல்லை ஞானத்தால் வ்ருத்தர்களாயிருப்பவர்கள் இல்லாத ஸபையை ஸபை என்று ஞானிகள் சொல்வதில்லை. என் பதியான தர்மபுத்திரர் தோற்றுப் போகாமல் இருக்கும்பொழுது நான் த்யூதத்தில் எப்படி தோற்கப்பட்டுப்போனேன். அறிவாளிகள், பத்னி என்பவள் பதியுடன் ஸமானமான தர்மமுள்ளவள் என்று சொல்கின்றனர். பதி தோற்றுப்போய் பதி ஸேவகனானால் அவனுடன் சேர்ந்தே பத்னி வேலை செய்யவேண்டும். ஆகையால் என் பதி தோற்றுப்போயிருந்தாலும் எனக்கு தாசித்தன்மை தனியாய் ஏற்படாது. என்று துரௌபதி சொல்லியும் பீஷ்மாதிகள் கலியின் ஆவேசத்தால் அவிவேகமுள்ளவர்களாகி நீ தர்மபுத்திரரைக் கேட்டுக்கொள் என்று பேசாமலிருந்து விட்டனர். அந்தசமயம் துரியோதனனுக்கு விரோதம் செய்ய எவனும் சக்தனாகவில்லை அந்த சபையில் விதுரர் இந்த சொக்கட்டான் ஆட்டம் அதர்மம் தான் என்று ஸ்பஷ்டமாய்ச் சொன்னார். பிள்ளைகளுடன் சேர்ந்த திருதராஷ்டிரன் அந்த விதுரனின் வார்த்தையை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது விதுரர் இரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு தன் அசக்தியை தேவர்களுக்கு அறிவித்துக்கொண்டு கூக்குரல் போட்டார். துரௌபதியைப் பார்த்துப் பேசினார்.



நீ தர்ம மார்க்கத்தால் தோற்றுப்போகவில்லை. மகத்தான அதர்மம் இந்த ஸபையை ஆக்கிரமித்திருக்கிறது. என்றிவ்வாறு விதுரன் சொல்லவும் துரியோதனின் தம்பியான விகர்ணன் பாபிஷ்டனாய் இருந்தபோதிலும் தான் தர்மத்தை அறிந்தவன் என்று வெளியில் காட்டிக்கொடுப்பதற்காக டம்பத்திற்காக என்று "இந்த துரௌபதியை ஜயித்தது அதர்மமே" என்று சொன்னான். உடனே கர்ணன் விகர்ணனை அதட்டினான். அப்பொழுது பீமசேனர் துரௌபதி கஷ்டப்படுவதைப் பார்த்து தர்மபுத்திரரிடம் தர்மம் கெட்டுப்போயிருப்பதையும் கண்டு கொண்டு அரசன் தர்ம பிரஷ்டனாய் ஆகிவிடும்பக்ஷத்தில் யுவராஜா அவனை சிக்ஷிக்க வேண்டுமென்று சாஸ்திரம் இருப்பதால் இவ்வாறு பேசினார். ஹே தர்மபுத்திரா! இந்த துரௌபதியை சொக்கட்டான் ஆட்டத்தில் பந்தயம் வைத்த உன் இருகைகளையும் கொளுத்திவிடவேண்டும் என்றார். அப்பொழுது அர்ஜுனன், பீமசேனா! இவ்வாறு நீ சொல்லலாகாது என்றான். அதற்கு பீமசேனர் அர்ஜுனனைப் பார்த்து இவ்வாறு பேசினார். நான் இப்படி வார்த்தையால் பேசவேண்டுமேயல்லாது காரியத்தை செய்துவிடலாகாது. ஆகையால் தர்மபுத்திரரின் கைகளை கொளுத்தவில்லை. தன்னைவிட மேலானவர்கள் அபராதம் செய்தால் அவரை வார்த்தையால் சிக்ஷிக்கவேண்டும். நடுத்தரமுள்ளவர்கள் தப்பு செய்தால் அவனை பணத்தால் சிக்ஷிக்க வேண்டும். அதமன் தப்பு செய்தால் அவனுக்கு சரீரதண்டனை விதிக்கவேண்டும். ஆதலால் உத்தமரான தர்மபுத்திரருக்கு வார்த்தையால் தண்டித்தேன். என்றிவ்வாறு பீமசேனர் அர்ஜுனனுக்கு சொன்னார். பிறகு கர்ணன் துரௌபதியைப்பார்த்து, மங்களமானவளே! நீ பதி இழந்தவளாய் ஆனாய். துரியோதனனின் வீட்டிற்குச் செல் என்று பேசினான். பிறகு துரியோதனன் பாண்டவர்களுக்குள் ஒருவருக்கொருவரின் விரோதத்தை ஏற்படுத்துவதற்காக இவ்வாறு பேசினான். துரௌபதியே! உன் துக்கத்திற்கு காரணமாயிருப்பவர் இந்த தர்மபுத்திரர் ஒருவர் தான். மற்ற நான்கு தம்பிமார்களும் எங்களுக்கு இந்த தர்மபுத்திரர் பூஜ்யரன்று என்று சொல்லட்டும். அல்லது பீமசேனரும் அர்ஜுனனுமாவது தங்

களுக்கு அவர் குருவல்லவென்று சொல்லட்டும். அல்லது பீமசேனராவது அவ்வாறு தர்மபுத்திரர் தனக்கு குருவல்லவென்று சொல்லட்டும். உன்னை இந்த ஸபையில் விட்டு விடுகிறேன். என்று துரியோதனன் சொல்லவும் பீமசேனர் சொன்னதாவது தர்மபுத்திரர் எங்களால் பூஜ்யரானவர். இதில் சந்தேகமில்லை லும் பெரியோர்கள் பலத்தால் ஜ்யேஷ்டரான க்ஷத்திரியரை இவர் வென்று சொல்வதால் உங்கள் எல்லோருக்கும் நான் குரு. வீர்யபல ஜ்யேஷ்டன் என்னும் விஷயத்தில் உங்களுக்கு சந்தேகம் இருக்கும் பக்ஷத்தில், வீரர்களென்று எண்ணிக்கொண்டிருப்பவர்களே! இப்பொழுதே யுத்தத்திற்கு எழுந்திருங்கள். பரிவாரங்களுடன் கூடிய உங்கள் எல்லோரையும் என் உள்ளங்காலால் தேய்க்கிறேன். யார் என்னுடன் யுத்தத்தை விரும்புகிறானோ அவனை உள்ளங்காலால் தேய்க்கிறேன். என்றிவ்வாறு சொல்லி கர்ஜித்துக்கொண்டு பீமசேனர் எழுந்திருக்கவும் அச்சபையே பயத்தால் நடுங்கியது. எவனும் யாதும் பேசவில்லை. பீஷ்மர் த்ரோணர் விதுரர் முதலானவர்கள், பீமசேனா! எல்லா குற்றத்தையும் மன்னிப்பாய், நீ சொன்னது ஸத்யம் தான், என்று சொல்லி பீமசேனரை இரண்டு கையைப் பிடித்து உட்கார்த்தி வைத்தார்கள். பீமசேனர் சபையில் உட்கார்ந்த பிறகு திருதராஷ்டிர புத்திரர்கள் மனச்சமாதானம் அடைந்தனர். தர்மபுத்திரராலும் இதர குருமார்களாலும் அப்பொழுது தடுக்கப்பட்டவராய் பீமசேனர் குருஜனங்களின் மரியாதைக்காக துரியோதனாதிகளை ஸம்ஹாரம் செய்யவில்லை. மூத்தவரிடம் தம்பி இவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை பீமசேனர் வெளிக்காட்டி, துரியோதனாதிகளுக்கு பாபத்தின் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்காக தர்ம புத்தியுள்ள தர்மபுத்திரரை மீறி நடக்கவில்லை. பிறகு பாபியான துரியோதனன் பீமசேனர் பார்த்திருக்கும் பொழுதே துரௌபதிக்காக அவளுக்கு தன் துடையை காண்பித்தான். அப்பொழுது பீமசேனர் மேலான வேகமுள்ள என் கதாயுதத்தால் உன்னை உன் துடையை பேதிக்கிறேன் என்று சொன்னார். அப்பொழுது துரியோதனன் பாண்டவர்களே! உங்களிடம் வேறு சொத்து இல்லையாதலால் கிருஷ்ணையை பந்தயமாக சொக்கட்டானாட்டத்தில்



வையுங்கள் என்று மீண்டும் பேசினான். இவ்வாறு துரியோதனன் ஸ்ரீ கிருஷ்ணரை அவமதிக்கவும், பீமசேனர் உன்னை பூமியில் தள்ளி உன் தலையை நன்றாய் தேய்க்கிறேன் என்று துரியோதனனைப் பார்த்து சபதம் செய்தார். என் பின்னாடியும் கூட யார் ஸ்ரீ கிருஷ்ணரை தூஷிக்கிறானோ அவன் என்னால் கொல்லப்படத்தகுனவான் என்று பீமசேனரின் ப்ரதிக்ஞை ஸ்திரமானது. அவனும் இன்னமும் அதிகமாய் துரியோதனனுக்கு பாபவிருத்தி ஏற்படுவதற்காக பீமசேனர் அப்பொழுதே துரியோதனனைக் கொல்லவில்லை. கர்ணன், துரௌபதியே! எங்கள் அரசனான துரியோதனனின் வீட்டுக்குச்செல், பாண்டவர்கள் இல்லை, என்று துரௌபதியைப் பார்த்துச்சொன்னான். இப்படி கர்ணன் பேசவும் பீமசேனர் எழுந்தார். பின்னாடியே அர்ஜுனன் எழுந்தான். இவ்விருவர்களையும் தர்மபுத்திரர் பீஷ்மர் முதலியோர் தடுத்தனர், பீமார்ஜுனர்கள் கீழே உட்கார்ந்தபின் துரியோதனன், ஹே துச்சாசனா! எங்களுக்கு தாஸர்களாய் ஆகிவிட்ட பாண்டவர்களின் வஸ்திரத்தை அப்புறப்படுத்து, என்று சொன்னான். இவ்வாறு சொல்லப்பட்டவனான துச்சாசனன் பாண்டவர்களிடம் வந்தான். பிறகு பாண்டவர்கள் தங்கள் வஸ்திரங்களை துச்சாசனிடம் கொடுத்தனர், பிறகு கிழிந்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, துரியோதனாதிகள் நல்லவர்களல்லவென்பதை வெளியாக்கி மகத்தான பொறுமை குணத்தை அவலம்பித்து தரையில் உட்கார்ந்தனர். துரௌபதியின் வஸ்திரத்தை அப்புறப்படுத்த துரியோதனனால் சொல்லப்பட்ட துச்சாசனன், பாண்டவர்கள் பார்க்கும் பொழுதே துரௌபதியின் வஸ்திரத்தை இழுத்தான். அப்பொழுது பீமசேனர் பேசினார். பாபிஷ்டர்களில் ச்ரேஷ்டனாய், மேலான தர்மசீலமுள்ள குருராஜனின் வம்சத்தில் அதமனாயுள்ள இந்த துச்சாசனின் மார்பைப்பிளந்து எல்லோர் எதிரில் ரத்தத்தை பானம் செய்கிறேன் என்றார். துச்சாசனன் வஸ்திரத்தை இழுக்கும் பொழுது துரௌபதி ஸ்ரீ கிருஷ்ணரை மிகவும் விசேஷமாய் ஸ்மரித்தாள். அப்பொழுது துரௌபதிக்கு திவ்யமான மிகவும் மெல்லியதாயுள்ள தங்கம் போல் மஞ்சள் வர்ணம் கொண்ட

மற்றொரு வஸ்திரம் வெளியாயிற்று. அடுத்தடுத்து துச்சாசனன் த்ரௌபதியின் சேலையை இழுக்கவும் முந்திய சேலைக்கு ஒப்பான வேறு சேலைகள் உண்டாயின. பாபியான துச்சாசனன் அந்த வஸ்திரங்கள் இவ்வளவு தான் என்று வஸ்திரங்களின் அந்தத்தை அடையவில்லை. களைத்துப்போய் சரீரம் வேர்வை வேர்த்த சபையில் உட்கார்ந்து விட்டான். மலைபோல் வஸ்திர ராசி [illegible]டான பின், மிக்க மந்தபுத்தியுள்ள துரியோதனன் கோபமடைந்து இவளை என் வீட்டிற்கு அழைத்துச்செல், ஏன் தவக்கம் என்று பேசினான். அப்பொழுது த்ரௌபதி இவ்வாறு சபதம் செய்தாள், பீமசேனர் துரியோதனனைக் கொல்கிறார். அர்ஜுனன் கர்ணனைக்கொல்கிறார். சொக்கட்டானில் மோசக்காரனான சகுனியை ஸகாதேவன் கொல்கிறார். என்று த்ரௌபதி பேசவும், பீமசேனர் அப்படியே தான் நடக்க போகிறது என்று சபையிற் சொன்னார். அர்ஜுனனும் ஸகாதேவனும் த்ரௌபதி செய்த ப்ரதிக்ஞையைச் செய்தனர். பிறகு நகுலன் சகுனியின் மகனைக் கொல்வதாய் சபதம் செய்தான். பிறகு துச்சாசனன் த்ரௌபதியை வீட்டிற்கு அழைத்துப்போக இழுத்தான். அதைப் பார்த்து பீமசேனர் கோபத்துடன் பேசினார். அர்ஜுனா! அர்ஜுனா! சிறுவனே! இப்படிப்பட்ட சந்தர்பத்தில் எனக்கு பொறுமை குணம் பிடிக்கவில்லை. கொளுத்தினால் மரக்கட்டைக்கு ஸமமாயும் கொளுத்தாமற் போனால் அமேத்யத்திற்கு ஸமமாயுமுள்ள இந்த ம்ருதசரீரத்திற்கு வித்யை கர்மம் பிள்ளைகள் என்று மூன்று பலன்கள் பாக்கி நிற்கின்றன என்று வேத வசனமிருந்து வருகிறது. பத்னியை இதராள் கெடுத்துவிட்டால் பிள்ளை என்ற பலன் ஏற்படாது. யாருடைய ஸம்ஸாரம் கெடுக்கப்பட்டவளாய் ஆகிறாளோ அந்த புருஷன் உத்தம லோகத்தை அடையமாட்டான், இந்த புருஷனுடைய இடது பாதி கெடுக்கப்பட்டதாகிறது. தன் பத்னியை ரக்ஷிப்பதில் சக்தி இல்லாமல் அவள் கெடுக்கப்பட்டவளாயின் அவளை இவன் விட்டு விட்டாலும் இவனுக்கு க்ஷேமம் ஏற்படாது. இந்த காரணங்களால் பொறுமை உசிதமல்லவாதலால் இப்பொழுது பரிவாரங்களுடன் கூடிய துரியோதனாதிகளை என் ஸ்வரூப ஸாமர்த்



தியத்தால் கொல்கிறேனென்று பேசிக்கொண்டு சத்ருக்களை சுடுவதுபோல் பார்த்தான். த்ருதராஷ்டிர புத்திரர்களை மிச்சம்மீதி இல்லாமல் செய்யவேண்டுமென்று புத்தியால் நிச்சயம் செய்து பீமசேனர் கோபத்தால் மிக்க பயங்கரமான பரிகாயுதத்தை எடுக்கப்பார்த்தார். அப்பொழுது துரியோதனின் அக்னி ஹோத்ர க்ருகத்தில் நரிகள் ஊளையிட்டன. அப்படியே த்ருதராஷ்டிரனின் வீட்டிலேயும் பயங்கரமான அநேக அபசகுனங்கள் உண்டாயின. பீமசேனர் மிக்க கோபங்கொண்டவுடன் மிக்க பயங்கரமான அபசகுனங்களை த்ருதராஷ்டிரன் கண்டு, விதுரனை இந்த அபசகுனங்களுக்கு என்ன பலன் என்று சீக்கிரம் ப்ரச்னம் செய்தான். அப்பொழுது விதுரர் ஜ்யேஷ்டரான த்ருதராஷ்டிரரைப் பார்த்து சொன்னதென்னவென்றால் இந்த நிமிஷத்தில் உன் பிள்ளைகள் பரிவாரங்களுடன் பீமசேனரின் பலத்தால் அடிபட்டவர்களாய் நாசமடைகின்றனர். மகனே! என்ன ஜயித்தாய் என்ன ஜயித்தாய் என்று கேட்டுக்கொண்டு பையனைப்போல் ஆடுகிறாய். அதர்மத்தால் தோற்றுப்போயிருக்கும் பாண்டவர்களை இந்த த்யூதத்தில் தோற்றுப்போனவர்களாய் எண்ணுகிறாய். ஸ்திரீ ஜனங்களிடத்திலும் சொக்கட்டான் ஆட்டத்திலும் கொடுத்ததையும் கர்வத்தால் அவிவேகியானவன் கொடுத்ததையும் கொடுத்ததாய் வித்வான்கள் சொல்வதில்லை. அவ்வாறு கொடுத்தவனின் பந்து ஜனங்கள் அந்த சொத்தை மறுபடியும் பிடுங்கிவிடலாம் என்று சொல்லுகின்றனர். ஆனாலும் பாண்டவர்கள் உன் பிள்ளைகளுக்கு துஷ்டத்தன்மையை அறிவிப்பதற்காக கொடுபட்டுப் போன பொருளை பிடுங்கவில்லை. என்றிவ்வாறு விதுரர் சொல்லவும் த்ருதராஷ்டிரன் இந்த அபசகுனங்களுக்கு பலன் எப்படி ஏற்படாமல்போகும் என்று ப்ரச்னம் செய்தான். அதற்கு விதுரன் சொன்னதாவது சீக்கிரம் த்ரௌபதியை தாஸித்தன்மையிலிருந்து விடுவிப்பாய். வரனைக்கொடுத்து த்ரௌபதியை சந்தோஷப்படுத்து. இல்லாவிடில் உன் பிள்ளைகள் பீமசேனரால் தேய்க்கப்பட்டு இறந்து போனதாய் அறி. இதில் உனக்கு சந்தேகம் வேண்டாம். த்ரௌபதியும் பாண்டவர்களும் தங்கள் தபோவிருத்தியை அபேக்ஷித்து உன் பிள்ளைகளை

தங்கள் தபத்தால் தகிப்பதில்லை. ஆகையால் உன் பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றனர். அப்படியும் நீ துரௌபதியை விடுவிக்காமற்போனால் பீமசேனர் தன் பலத்தால் உன் பிள்ளைகளை கொல்கிறான். இதில் சந்தேகமில்லை, என்று விதுரன் சொல்லவும் திருதராஷ்டிரராஜன் தன் மகனான துச்சாசனனை அதட்டி துரௌபதியை விடுவித்தான். வரனைக்கேட்டுக்கொள் என்று சொன்னான். வரத்தால் திருதராஷ்டிரனால் சந்தோஷம் செய்யப்பட்டவளான த்ரௌபதி பாகவத தர்மத்தில் இருந்துவரும் தன்னுடைய நிமித்தமாக வரனை வேண்டிக்கொள்ளவில்லை. பாண்டவர்களுக்கு தாஸத்தன்மையிலிருந்து விடுதலை ஏற்படவேண்டுமென்று வரனை கேட்டுக்கொண்டாள். திருதராஷ்டிரனும் தம்பிமார்களுடனும் ராஜ்யத்துடனும் கூடிய தர்ம புத்திரருக்கு விடுதலையாகிய வரனை துரௌபதிக்குக் கொடுத்தார். மீண்டும் வரனை கேட்டுக்கொள் என்று திருதராஷ்டிரன் சொல்லவும் துரௌபதி வரனைக் கேட்டுக்கொள்ளவில்லை. ஓர் ஸ்திரீ தன் பதியிடமிருந்தும் விஷ்ணுவிடமிருந்தும் தனிப்பட்ட இதராளிடமிருந்து வரனைப் பெறுதல் கூடாது. இதுவே பகவத் ப்ரீதியை உண்டாக்கும் தர்மமாகும். ஆகவே துரௌபதி வேறு வரனைக் கேட்டுக்கொள்ளவில்லை. பாண்டவர்களின் ராஜ்யத்தை அதர்மத்தால் அபகாரம் செய்ததால் அந்த ராஜ்யத்தை திருப்பிக்கொடுப்பது வரனாக ஆகாது. என்று தெரிந்து துரௌபதி பாண்டவர்களின் விடுதலையைக்கேட்டாள். க்ஷத்திரிய ஸ்திரீயானவள் தன் மாமனாரிடமிருந்து ஐஹிகமான வரன்கள் மூன்றைக் கேட்டுக்கொள்ளலாம். பிராம்மண ஸ்திரீ நூறு வரன்களைக் கேட்டுக்கொள்ளலாம். என்று பாகவத தர்மத்தில் சொல்லப்பட்டிருப்பதன் நிமித்தம் மேலே குறிக்கப்பட்டிருக்கும் வரத்திற்கு மேல் ஒரு வரத்தையும் கேட்கவில்லை. பிறகு பாண்டவர்கள் துரௌபதியுடன் தாசத்தன்மையிலிருந்து விடுபட்டவர்களாய் குருமார்களை நமஸ்கரித்து தங்களுடைய இந்திரப்ரஸ்தத்திற்கு புறப்பட்டுப் போனார்கள்.

(தொடரும்)



# விதவா விவாக கண்டனம்.

(முன் 158-ம் பக்கம் தொடர்ச்சி)

கண்மூடித்தனமாய் எமது பெண்மக்களை துஷ்குலத்தில் கொடுத்து [illegible]டு இம்மையிலும் மறுமையிலும் தீரா துக்கங்களை அனுபவிக்கவிட்டு அவைகளைத் தடுக்க எமது முன்னோர்கள் எண்ணவில்லை என்று சொல்லிவருவது சிறிதும் பொருந்தாது. வாக்தானத்தால் மாத்திரம் நாம் இவ்வாறு முடிவு செய்யக்கூடாதென்றும் அது சாமானியமான கருமம் என்றும் நினைத்துவிட வேண்டாம். இந்த வாக்தானம் பெற்ற மாத்திரத்தாலேயே பதி என்ற பெயரே ஏற்பட்டு விடுகிறதென்றால் இது சாமான்ய கர்மமாகாது. மேலும் மனு 9 வது அத்தியாயம் 71 வது சுலோகத்தில் ஒருவனுக்கு வாக்தானம் செய்த பின் வேறொருவனுக்கு விவாகம் செய்யக்கூடாதென்றும் அப்படிச்செய்வதால் புருஷா நிருதமென்ற நரகம் ஏற்படுமென்றும் எச்சரிக்கை செய்திருக்கிறார். வாக்தானம் பெற்றவனை எவன் விடுவிக்கிறானோ அவன் திருடன் போல் தண்டிக்கத் தகுந்தவனென்று "ஸகிருத்ப்ரதீயதே கன்யா ஹரஸ்தாம் சௌரதண்டபாக்" என்று யாக்ஞவல்க்யர் சொல்லுகிறார். ஆதலால் மேற்கண்ட பிரபலமான காரணங்களில்லாமல் அக்கன்னிகையை அப்புருஷனிடமிருந்து விடுவித்தல் கூடாது.

வாக்தானம் போல் இன்னமும் பல சடங்குகள் இருந்து வருகின்றன. மனோதானம் என்பது ஒன்று. கங்கணபந்தம் என்பது மற்றொன்று. பிறகு உதகதானம் என்பது உண்டு. பிறகு பாணிக்ரஹணம் நடக்கும். பிறகு ஸப்தபதியை கன்னிகை அடைகிறாள். இவ்வாறு வாக்தானம் பெற்று ஸப்தபதியாவதற்குள்ளாய் பிரபலமான காரணங்கள் ஏற்பட்டால் அக்கன்னிகையை புனர் விவாகம் செய்யலாமென்று மகரிஷிகளின் அபிப்பிராயம். ஸப்தபதியாகி விட்டாலோ அந்த ஸதிபதிகளுக்குள் திடமான பந்தம் ஏற்பட்டு விடுகிறது. அதை விடுவிக்க எவராலும் முடியாது. ஸப்தபதி என்றால் ஓர் திடமான கருங்கல்லின் மீது வரன் கன்னிகையை ஏழு அடியை மந்திர பூர்வமாய் வைக்கும்படிச்செய்து ஏழாவது அடிவைத்தவுடன் ஸகா ஸப்தபதாபவ, ஸப்தபதியை நிறைவேற்றிய கன்னிகையாகிய நீ எனக்கு ஸஹசாரிணீயாய் ஆகிவிட்டாய் என்று பல மந்திரங்களைச்சொல்லு

கிறன், புருஷன் இறந்த பின்பும் அவளை பதியினின்றும் விடுவிக்க முடிவதில்லை என்றால் எவ்வகை பந்தம் அப்போது ஏற்படுகின்றதென்பதை யோசியுங்கள். ஆதலால் ஸப்தபதியானவுடன் அப்பெண்ணுக்கு பத்னீத்வமும் புருஷனுக்கு பதித்வமும் ஏற்படுவதுடன் நாமமும் அவ்வாறே ஏற்படுகிறது. இதற்கு முன் வாக்தானம் பெற்றது முதல் வழங்கி வந்த பதி என்ற நாமம் வியவஹாரத்துக்கு மட்டில் உபயோக மானது. அதாவது சித்திரத்திலுள்ள ஸிம்ஹம் ஸிம்ஹமென்று தான் வியவஹரிக்கப்படும். ஆதலால் பதி என்ற நாமம் இருவகையிலும் இருக்கிறபடியால் முக்ய விருத்தி என்றும் அமுக்கியவிருத்தி என்றும் விபாகம் செய்ய நேர்ந்தது. அவ்வாறு வியவஹாரமுண்டென்பதற்கு மனுவின் ஆதாரமும் காட்டப்பட்டிருக்கிறது. ஆதலால் இம்மந்திரங்களில் காணப்படும் முதல் பதி இரண்டாம்பதி என்று பெயரைக் கொண்டு மட்டில் விதவைக்கு புனர் விவாஹம் உண்டு என்று நிச்சயம் செய்யக்கூடாது. இந்த நிரூபத்தின் கடைசியில் ஸப்தபதி யடைந்த ஸ்திரீகளுக்கு புனர் விவாகம் கூடாதென்று காட்டும் பல பிரமாணங்கள் கூறப்படும். வாக்தானத்திற்கு பின்பு பல காரணங்களை முன்னிட்டு ஓர் கன்னிகைக்கு இரண்டாம் பதி ஏற்படும் சந்தர்பம் உண்டென்று பல வாக்யங்களால் சொல்லியாய் விட்டது. இம்மந்திரங்களில் சொல்லப்பட்ட பதிக்கள் ஸப்தபதியை செய்துகொண்டவர்களென்று தெரிவிக்கக்கூடியதாயில்லை. ஆகையால் ஸப்தபதிக்கு முன்பு வாக்தானம் முதலியவைகளைப்பெற்ற ஓர் பெண் முன் சொல்லிய ஏதோ ஒரு காரணத்தைக்கொண்டு வேறொரு பதியை அடைந்தால் அவ்விருவர்களைச்சேர்த்து வைக்கவும், சமான லோகத்தில் இருக்கச்செய்யவும் பஞ்சோதன ஆட்டிற்கு மகிமை உண்டென்று இம்மந்திரங்கள் அறிவிப்பதாய் சொல்லவேண்டுமேயல்லாமல் விதவாவிவாஹத்திற்கு இந்த 3, 4, 7. பிரமாணங்கள் சாதகமாய் இருப்பதாய் சொல்லவே முடியாது. ஆகவே விதவா விவாகத்திற்கு சாதகமாய்ச்சொன்ன 7 வேதவாக்யங்களில் ஒன்றிலுமே விதவா விவாஹத்திற்கு விதாயகமான வார்த்தை எதுவும் இல்லை என்றும் ஆதலால் இவை விதவா விவாஹத்திற்கு ஸாதகமாய் இல்லை என்றும் விளக்கியாய் விட்டது. எமது மகரிஷிகளின் ஆக்ஞையும் தமக்கு சாதகமாய் இருப்பதாய் அந்ததலைப்பின் கீழ் விதவாவிவாஹ வாதிகள் எடுத்துக்காட்டி யிருக்கும் பதிநான்கு ஸ்மிருதிவாக்யங்களைப்பற்றி இனி பரிசீலனை செய்வோம்.

(1) நஷ்டே ம்ருதே ப்ரவ்ருஜிதேக்லீபேசபதிதே பதௌ|
பஞ்சாஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரன்யோ விதீயதே||



இது மனுவின் வாக்யமென்று விதவா விவாஹவாதிகள் கூறுகின்றனர், மனுஸ்மிருதி எந்த பதிப்பு புஸ்தகங்களிலும் இந்த ஸ்லோகம் காணப்படாதிருப்பினும் பராசர மாதவீயத்தில் மனுவாக்யமென்று சொல்லியிருப்பதை ஆதாரமாக வைத்து பரிசீலனை செய்தால் இதன் பாடமும் வித்யாஸமென்று தெரிய வருகிறது. இதில் காணப்பட்டிருக்கிறபடி பதிதே பதௌ என்றில்லாமல் பதிதேபிவா என்றும் பதிதே பிச என்றும் காணப்படுகிறது. பதி சப்தத்திற்கு ஸப்தமி ஏகவசனமான பத்யௌ என்ற பதம் தான் மனுஸ்மிருதியில் பல இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கையில் பதௌ என்று இந்த சந்தர்பத்தில் இந்த சுலோகத்திலிருப்பதாய் விதவா விவாஹவாதிகள் சொல்வது யோசிக்கத் தகுந்ததாய் இருக்கிறது.

இங்குள்ள பதங்களைக்கொண்டு இந்த சுலோகத்திற்கு அர்த்தம் என்ன ஏற்படுகிறதென்றால் பதி காணாமற்போதல், இறந்து போதல், ஸன்னியாஸியாய் போதல் ஸன்னியாஸியாய்விடுதல் நபும்ஸகனாய் போதல், ஜாதிப்ரஷ்டனாய் ஆதல் இந்த ஐந்து ஆபத்துக்களில் ஸ்திரீகள் வேறு பதியை அடைவதை விதிகள் அனுமதிக்கின்றன வென்று அர்த்தமாகிறது. பதிகாணாமற்போனால் ஒருவள் வேறு விவாஹம் செய்துகொள்ளலாமென்றால் பதி எவ்வளவு வருஷகாலம் காணாமற் போயிருந்தால் அவள் வேறு புருஷனை விவாஹம் செய்து கொள்ளலாமென்று சாமானியர்களுக்கும் சந்தேகம் பிறக்கும். அப்படியே பதி இறந்துபோனால் என்றால், எவ்வளவு நாளுக்குள் மாஸத்திற்குள் வருஷத்திற்குள் இறந்துபோனால் அவள் வேறு விவாஹம் செய்து கொள்ளலாமென்றும் சாமானியர்களுக்கும் சந்தேகம் பிறக்கும், ஆகவே இந்த சுலோகம் ஸாவகாசமெனப்படும். நிரவகாசமான இதர ப்ரமாணங்களைக்கொண்டு அதற்கு அனுசாரணையாய் இந்த சுலோகத்தை அர்த்தம் செய்யவேண்டியதாகும். இல்லாவிடில் ஒருவன் விவாகம் செய்துகொண்டு ஒன்றிரண்டு வருஷம் அவனிருப்பிடம் தெரியாதிருந்தால் அந்த ஸ்திரீ வேறு விவாகம் செய்துகொள்வது சாஸ்திர சம்மதமென்று அர்த்தம் செய்ய வேண்டியதாகும். அதுபோலவே 50 வயது கிழவியானாலும் அவளுடைய பர்த்தா இறந்துபோனால், விதீயதே என்று சொல்லியிருப்பதைக் கொண்டு அவள் வேறொரு புருஷனை விவாகம் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்று விதிப்பதாய் அர்த்தம் செய்யவேண்டியதாகும். அது போலவே புருஷன் நபும்பஸகனாய் போனால் ஒருவள் மற்றொரு புருஷனை விவாகம் செய்துகொள்ளலா

மென்றும் ஏற்படுகிறது. நபும்ஸகத்தன்மை ஏழுவகையாய் இருக்கிறது என்று சந்திரிகை என்னும் நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. நாரத ஸ்மிருதியில் புருஷர்களுக்கு 14வகை நபும்ஸகத் தன்மை என்றும், காம தந்திரத்தில் 20 வகை நபும்ஸகத் தன்மை என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இத்தனை தினுசுகளில் ஓர் வகை நபும்ஸகத்தன்மை தன் பர்த்தாவுக்கு இருப்பதாய் ஒருவள் கண்டுகொண்டால் அவள் வேறொருவனை விவாகம் செய்து கொள்வது சாஸ்திர சம்மதமென்று சொல்ல வேண்டும். ஆ! என்ன மதியீனம்! ஆகவே இந்த வாக்யத்திற்கு இதர ப்ரமாணங்களை அனுஸரித்துத்தான் அர்த்தம் சொல்லவேண்டும். பலிஷ்டமானவைகளும் நிரவகாசமாயுள்ள பிரமாணங்களுடன் ஏக வாக்யத்தை செய்வதென்று இதைத்தான் சாஸ்திர ரீதிப்படி சொல்வது வழக்கம்.

ஸ்திரீகளுக்கு ஒரே விவாகம்தான் உத்தமமென்றும் அவளிச்சைப் பட்டால் புனர்விவாகம் செய்துகொள்வது இரண்டாம் பக்ஷமாயினும் சாஸ்திரத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்றும் விதவா விவாக வாதிகளும் சரியே, விதவாவிவாகம்கூடாதென்பவர்களும் சரியே ஒப்புக்கொள்கின்றனர். அவள் எப்பொழுது புனர் விவாகம் செய்து கொள்ளலாமென்பதில் மட்டில் விவாதமிருக்கிறது. சுருங்கச்சொல்லின் விதவா விவாகம் தகாதென்பவர்கள் ஓர் ஸ்திரீ விவாகமாகி ஸப்தபதி நிறைவேறுவதற்கு முன்பு அவளுடைய புருஷன் இறந்துபோனால் அவள் இச்சைப்பட்டால் வேறொரு புருஷனை விவாகம் செய்து கொள்ளலாமென்று சாஸ்திரம் அனுமதிப்பதாய் அர்த்தம் செய்கிறார்கள். அவ்வாறு வேறொரு புருஷனை விவாகம் செய்துகொண்டவள் புனர்பூ எனப்படுகிறாள். அவளுடைய புருஷன் புனர்பூபதியாகிறான். அவளிடம் பிறந்தவன் பௌனர்பவன் ஆகிறான். பௌனர்பவனும் ஔரஸப்பிள்ளையைப்போல் சொத்தில் ஸமான பாகஸ்தனென்று ஸ்மிருதிகாரர்கள் சொல்கிறார்களாயினும் சிரார்த்தாதி வைதீக காரியங்களில் புனர்பூபதியும் சரியே பௌர்னபவனும் சரியே அருகதை இழந்தவர்களென்று எண்ணப்படுகின்றனர். (தொடரும்.)



# ஸ்ரீ மத்வ விஜயம்.

(நான்காவது ஸர்க்கம் 294-ம் பக்கம் தொடர்ச்சி)

(47) ஸம்ஸாரத்தினின்றும் மோக்ஷத்தை விரும்புகிறவன் அவன் ஞானியாயிருந்தால் இதராளுக்கு நிச்சயமாய் சாஸ்திர பாடம் சொல்வான்; அக்ஞானியாயிருந்தாலோ சாஸ்திரத்தை அவன் இதராளிடமிருந்து சிரவணம் செய்வான். இது சாமானியமாய் உலகில் கிருகஸ்தாசிரமிகளின் கடமை. ஸன்யாஸியாயிருந்தால் பாடப்ரவசனத்தையும் சிரவணாதிகளையும் இரண்டையுமே விசேஷமாய் செய்யத்தான் வேண்டியதாகும். ஆகவே பூர்ணப்ரக்ஞ ஆச்சாரியார் அவருடைய குருவான அச்யுதப்ரேக்ஷர் கோபத்துடன் அத்வைதிகளின் மாயாவாத சாஸ்திரத்தை பாடம் சொல்லாமல் நிறுத்திவிட்டவுடன், சிரவணம் செய்வதற்காக கூடியிருந்த ஜனங்கள் அவரை அந்த சாஸ்திரத்தின் கருத்தை எடுத்துச்சொல்லும்படி வற்புறுத்தவும் மாயா சாஸ்திரத்தை அவர் அப்பொழுது வெகு விசேஷமாய் எடுத்துச் சொன்னார். (48) ஏற்கனவே இந்த சாஸ்திரத்தைக்கேட்ட அநேகர் அதில் அதிகமான அறிவடைந்து தேர்ந்தவர்களாய் ஆக விரும்பி பூர்ணப்ரக்ஞர் செய்யும் சந்தேகமற்றதாயும், தகர்க்கபளாத பதில்களைக்கொண்டதாயும்,பரம்பரையாய் அதை பாடம் சொல்லிவந்தவர்களின் ஸம்பிரதாயத்தை பின்பற்றியதாயுமுள்ள அந்த மாயாவாதத்தின் தங்கு தடையில்லாத சொற்பொழிவைக் கேட்க அதில் ஈடுபட்டவர்களாய் அந்த இடத்தில் வந்து குவிழ்ந்தனர்.

## பாகவதத்தின் மூலத்தை நிஷ்கரித்தது.

(49) அச்யுதப்ரேக்ஷரின் ஸமீபத்தில் பாகவதத்தைச் சொல்லிக்கொண்டுவந்ததைக் கேட்டிருந்த ஐந்தாறு சிஷ்யர்கள் பல வகையான பாடபேதங்களுடன் எழுதப்பட்டிருந்த பாகவத மூலத்தை அந்த வேதங்களை எடுத்துக்காட்டி வாசிக்கவும், பூர்ணப்ரக்ஞர் அந்த பல புஸ்தகங்களில் ஓர் புஸ்தகத்தின் பாடம்தான்

அந்நூலை இயற்றியவரான ஸ்ரீ வேதவியாஸருக்கு ஸம்மதமான பாடம் என்று திடமாய் ஸாதித்தார். (50) அதைக்கேட்டு அச்யுதப்ரேக்ஷர் இதர மூலபாடங்களுக்கும் அர்த்தம் பொருந்துவதால் நீர் சொன்ன மூலபாடம்தான் ஸ்ரீவேதவியாஸருடைய பாடமென்று எப்படி நிச்சயிக்கக்கூடுமென்று கேட்க, தா சொன்ன மூலபாடத்தை யுக்திகளால் வியக்தமாய் அதுவே ச யானதென்று நிரூபித்துக்காட்டினார். (51) ஜகத்குருவான ஸ்ரீ வேதவியாஸரின் க்ரந்த நிர்மாணத்தின் உண்மையான நிலையை நீர் அறிந்திருக்கும் பக்ஷத்தில் நீங்கள் சொன்ன மூலபாடத்தின்படிக்குள்ள புஸ்தகத்திலேயே காணப்படுகிறபடி ஐந்தாவது ஸ்கந்தத்தின் சூர்ணிகையை மூலத்துடன் அதன் அர்த்தத்தை எடுத்துச்சொல்லும் என்று யதீசுவரரான அச்யுதப்ரேக்ஷர் சொல்லவும், பூர்ண ப்ரக்ஞர் அவ்வாறே ஸ்ரீ வேதவியாஸரின் மூலபாடத்தின்படி அதைச் சொன்னார். (52) அச்சமயம் அச்யுதப்ரேக்ஷரின் ஆக்ஞையின்பேரில் பூர்ண ப்ரக்ஞரை பரீக்ஷிப்பதற்காக எல்லா வகையாயுள்ள மூலபாடங்களுள்ள புஸ்தகங்களையும் பார்த்துக்கொண்டிருந்தனர். அவைகளில் பூர்ண ப்ரக்ஞாசாரியார் குறிப்பாய்ச்சொன்ன மூலபாடங்களுள்ள ஓர் புஸ்தகத்திலிருந்தபடியே ஒன்றையும் விடாமல் பாராமலேயே அந்த ஐந்தாவது ஸ்கந்தத்தின் எல்லா அத்யாயங்களையும் சொன்னார். (53) ஜயசீலரான பூர்ண ப்ரக்ஞரே! நீர் இந்த பிறப்பில் இந்த வேத புராணாதிகளை எல்லாம் படித்தவரன்று. அப்படியிருக்க இவைகள் உமக்கு மனதில் எப்படிதோன்றுகின்றன. அதன் காரணத்தைசொல்லும் என்று அச்யுதப்ரேக்ஷர் ப்ரச்னம் செய்ய இந்த வேதபுராணாதிகளை எல்லாம் நான் பூர்வ ஜன்மத்திலேயே அறிந்திருக்கிறேன் என்று பதில் சொன்னார். (54) இவ்வாறு பற்பல வகையாப் ஸகல ஜனங்களுக்கும் ஆச்சரியகரமான சித்தவிருத்தியுள்ள பூர்ண ப்ரக்ஞாசாரியாரின் கீர்த்தி அதுநூதனமாயிருந்தாலும் உலகில் எங்கும் வியாபித்த அக்ஞான இருளைப் போக்கும் சூரிய ப்ரபைபோலும், ஸாதுக்களாகிய நீராம்பல் கும்பல்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் சந்திரனின் நிலவு போலும் எங்கும் பரவியது.

ஸ்ரீமத் கவிகுலதிலகரான ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதரின் குமாரரான ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார் இயற்றிய மகா காவியமாயும் ஆனந்தமென்ற பதத்தை ஒவ்வொரு ஸர்கத்தின் அந்தத்திலும் அடையாளமாய் கொண்டதாயுமுள்ள ஸ்ரீ மத்வவிஜயத்தில் நான்காவது ஸர்க்கம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.



## ஐந்தாவது ஸர்க்கம்.

(1) பிறகு சிறிதுகாலத்திற்குப் பின் மிக்க மேலானதாயுள்ள வேதாந்த சாஸ்திரமாகிய தன் சொந்த ராஜ்யம் இதரர்களால் வேறு வகையாய் அர்த்தம் செய்யப்பட்டு கவர்ந்து போகப்படாமல் தான் எண்ணியபடி அர்த்தமும் ஸம்பிரதாயமும் தன் ஜனங்களில் வழங்கி அதை சரியானபடி பாதுகாக்க இந்த பூர்ண ப்ரக்ஞர் திறமை வாய்ந்தவரென்று, அவரை அச்யுதப்ரேக்ஷாசாரியார் யௌவ ராஜ்யத்தில் மந்திர பூதமான ஜலத்தால் சங்காபிஷேகம் செய்தார். (2) பிறகு அவருக்கு ஆனந்த தீர்த்தர் என்று அச்யுதப்ரேக்ஷர் செய்த நாமகரணம் அவர் ஆனந்த ரூபியான பகவானின் வாஸத்திற்கு அருகமான க்ஷேத்திரம் போன்ற மனமுள்ளவராதலாலும் ஆனந்தத்தை அதிகமாய்த்தரும் விஷ்ணு ஸர்வோத்தமத்வப்ரதிபாதகமான சாஸ்திரத்தை இயற்றுபவராதலாலும் அவருடைய யோக்யதையை விசேஷமாய் அறிவிப்பதாய் ஆயிற்று. (3) பிறகு ஒருஸமயம் அச்யுதப்ரேக்ஷாசாரியாரின் நண்பரான ஸன்யாசியார் ஒருவர் அநேக சிஷ்யர்களுடன் கூடிக்கொண்டு அச்யுதப்ரேக்ஷாசாரியார் இருந்த இடம் வந்துசேர்ந்தார். அந்த ஸன்யாஸியாரின் சிஷ்யர்கள் தர்க சாஸ்திரத்தில் மிக்க நிபுணர்களாய் கர்விஷ்டர்களாயிருந்தனர். அச்சமயம் அவர்கள் தர்க சாஸ்திரத்தில் நிபுணராயிருந்த ஆனந்த தீர்த்தரை வாதத்தில் ஜயிக்க விரும்பினர். (4) அவர்கள் ஆனந்த தீர்த்தர் கொண்டிருக்கும் ஜீவேசுவரபேதமென்பது சிரமமில்லாமல் சாதிக்கலாமென்று சொல்லி எதிர்வாதத்திற்கு பயங்கரமாயுள்ள அனுமானத்தை சீக்கிரம் எடுத்துச்சொன்னார்கள். தன் பக்ஷத்தை ஸாதிப்பதிலும் அதன் விரோதத்தைப் பரிகாரம் செய்வதிலும் நிபுணரான அவர் பக்ஷிராஜனான கருடன் பாம்பைக் கத்தரித்து எறிவதுபோல் அனுமானத்தை பல்வகையாய் கண்டனம்செய்தார்.

(தொடரும்)

# சங்கரலீலா விலாஸம்.

(முன் 140-ம் பக்கம் தொடர்ச்சி)

மைசூர் மகாராஜாகாலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A. எழுதுவதாவது:—

மேலும் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையில் அபேத உபாஸனையையும் ஜகத்தின் மித்யாத்வவாதத்தையும் இவைகளுக்கு அனர்த்தமான பலன்கள் உண்டென்று சொல்லி நிராகரித்திருக்கிறார். அங்கு காணப்படும் ஈச்வரோஹம் அஹம்போகீ ஸித்தோஹம் பலவான் ஸுகீ | அஸத்யம ப்ரதிஷ்டம் தேஜகதாஹுரநீச்வரம் || தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான் | க்ஷிபாம்யஜஸ்ரமசுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு | ஆஸுரீம்யோனிமாபன்னு: மூடா ஜன்மனி ஜன்மனி | மாம் அப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம்கதிம் ||

## அத்வைத தத்வம் பரமநாஸ்திகமாகும்.

ஸுதாகரமென்ற பத்திரிகையில் அத்வைத மதம் பரம நாஸ்திகமென்று காட்டப்பட்டிருப்பது சரியே, ஏனெனில் ஸ்வர்கமில்லை நரகமில்லை வேதம் பிரமாணமில்லை என்று சொல்லும் சார்வாகர்கள் நாஸ்திகர்களென்பது ஸர்வஸம்மதமானதாகும். சங்கராசாரியாரோ:—

(1) ஸ்வர்கம் மித்யை, 'பொய்' அதாவது பின்னுடியும் இல்லை, இப்பொழுதும் இல்லை முன்னுடியும் இருக்கப்போவதில்லை, (2) வேதம் மித்யை பொய், அதாவது பின்னுடியும் இல்லை, இப்பொழுதும் இல்லை, முன்னுடியும் இருக்கப்போவதில்லை. (3) ஸ்வர்கத்திற்கு ஸாதனமாயுள்ள கர்மங்களும் மித்யை பொய் அதாவது பின்னுடியும் இல்லை, இப்போதுமில்லை இனியுமில்லை. (4) துஷ்கர்மத்திற்கு பலனுயுள்ள நரகமும் மித்யை பொய் அதாவது பின்னுடியுமில்லை, இப்பொழுதும் இல்லை, இனியும் இருக்கப்போவதில்லை. (5) மேலும் ஸத்கர்மங்களுக்கு ஸாதனமான யக்ஞசாலை, ப்ராம்மணாதி வர்ணங்கள், ஸ்ருக், ஸ்ருவம் முதலான ஸாமக்ரிகள் எல்லாம் மித்யை பொய் என்றால் பின்னுடியும் இல்லை, இப்பொழுதும் இல்லை, இனியும் இருக்கப்போவதில்லை. (6) என் சரீரம் முதற்கொண்டு விஷ்ணு, ப்ரம்மா, ருத்திரன், ஆகாசம் முதலான எல்லா ப்ரபஞ்சமும் மித்யை பொய், பின்னுடியும் இல்லை, இப்பொழுதும்



இல்லை இனியும் இல்லை. என்று இவ்வாறு அவர் சொல்லி வருகிறார். இந்த ஸ்திதிக்கு வந்துவிட்டது. பரப்ரம்மமாவது இருப்பதாய் அவர் சொல்லுகிறாரோ என்றால் அதையும் சொல்வதில்லை. அவருடைய அபிப்பிராயப்படி பரப்ரம்மன் அக்ஞேயன் அறியப்பட முடியாதவன். அவருடைய தரிசனாதிகள் ஆகமாட்டாது. அவர் ப்ரம்ம விசாரத்திற்கும் விஷயம் ஆகமாட்டார், ப்ரம்மஜிக்ஞாஸை என்று சொல்லப்படும் ப்ரம்மம்கூட ஒழிந்து அசத்தமுள்ளவர்தான். சின்மாத்ர நிர்குணன் ப்ரம்ம விஷயமான பலவகையான வியவகாரங்களும் விசார ரூபமான ஞான விவாதங்களும் பரப்ரம்ம விஷயமாய் அஸம்பாவிதம். சுத்தப்ரம்மனுக்கு ஸத்தா அதாவது இருத்தல் என்ற குணமும் கூட இல்லை. அத்வைதிகள் ஒப்புக்கொண்டிருக்கும் வேதாதி ஆறு பிரமாணங்களாலும் அந்த பரப்ரம்மம் ப்ரதிபாத்யனாய் அதாவது சொல்லப்படுகிறவனாய் ஆவதில்லை. ஏழாவது ப்ரமாணத்தையோ அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. (8) அவர் சொல்லும் முக்தியும் கூட இவ்வாறே ஓர் கரடுமுரடான வஸ்துதான். முக்தி என்பது நாம் செய்யும் ஸாதனங்களால் வரக்கூடிய ஓர் ஸுக விசேஷம் என்று அவர் சொல்வதில்லை. அவருடைய அபிப்பிராயப்படி முக்தி ப்ரம்ம ஸ்வரூபமாகிறது. அதனால் முக்தி என்று பின்னுடியும் இருந்தது, இப்பொழுதும் இருக்கிறது, இனியும் இருக்கப்போகிறது என்று ஏற்படுகிறது. முக்திக்காக ப்ரயத்னம் செய்வது வியர்த்தமாகிறது. ஜீவனின் விவக்ஷையின்படி முக்தியை எடுத்துச்சொன்னால் ஆத்ம நாசம் தான் முக்தியாகிறது. அதனால் தன்னுடைய நாசம் தான் தனக்கு முக்தி என்று சங்கராசாரியாரின் அபிப்பிராயம் என்று ஏற்படுகிறது.

முடிவு என்ன ஏற்பட்டது. பரப்ரம்மம் முயற்கொம்புபோல் ஆனான். அவன் நம்முடைய ஞானத்திற்கு விஷயனாவதில்லை. பிரபஞ்சமும் முன்பு இருந்திருக்கவில்லை, இப்பொழுதும் இல்லை; முன்னுடியும் இருக்கப்போவதில்லை. முக்தியும் ப்ரயத்தனம் செய்து ஏற்படும் ஸ்தானமுமல்ல. தவிரவும் அது ஆத்மநாச ரூபமாதலால் ஒருவராலும் அபேக்ஷிக்கக்கூடிய புருஷார்த்தமுமல்ல, என்று சங்கராசாரியார் சொல்லிவிட்டார். இதனால் சந்தேகமன்றி ஸ்வேச்சையாய் நடக்க என்ன கஷ்டம்? ஆனால் இதில் ஓர் சமத்காரமிருந்துவருகிறது. விதவா விவாகம் தர்மம் சாஸ்திரீயமே என்று சிலர் நிரூபித்தனர். ஆனால் அவர்கள் வீட்டில் விதவையை விவாகம் செய்துகொள்ளவில்லை. இவ்வாறு சில பேடிகள் உண்டு. அதுபோல் ப்ரபஞ்சம் ப்ரவிருத்திக்கு யோக்யமல்ல, தர்மாதிகள் மித்யை பொய். கர்ம ஸன்யாஸம் அதாவது கர்மத்தைவிட்டு

விடுவதுதான் சரி என்று இவ்வாறு அத்வைதிகள் பரம நாஸ்திக தத்வத்தை உபபாதனம் செய்தனர். ஆனால் வேதோக்தமான கர்மங்களை தங்களால் முடிந்தவரையில் இதரர்களைவிட அதிகமாகவே செய்து கொண்டு, விழுப்பு படாமல் பறந்துகொண்டிருக்கின்றனர். கர்மங்களை செய்வதில் சிறிது குறை ஏற்படும்பொழுது தத்வத்தை அவர்கள் யோசித்தால் கர்மங்கள் வியர்த்தமென்பது ஏற்பட்டு கர்ம ப்ரம்சத்தால் துக்கம் ஏற்படும்படியாய் இல்லை. அத்வைதிகள் கர்மங்களைச் செய்வது அவர்களின் சித்தாந்தத்திற்கு விரோதமானது. அவர்களுடைய ஆசாரியனான சங்கராசாரியாரின் வாக்யத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாதிருந்தால்தான் கர்மங்களைச் செய்வதில் அவர்களுக்கு ப்ரவிருத்தி ஏற்படுவது சம்பாவிதமாகும். ஆசாரியனின் உபதேசத்தையும் நம்பி விட்டு ஜகத்து முதலானவைகள் பின்னுடியும் இருந்திருக்கவில்லை இப்போதுமில்லை இனியும் இருக்கப்போவதில்லை என்று தெரிந்தும் கூட, கர்மமார்க்கத்தில் அவர்கள் பிரவிருத்தித்திருப்பது ஓர் வகையான பேடித்தன்மையே ஆகிறது.

அத்வைத வாதத்தில் மகா ஜுகுப்ஸையை அடைந்த பிரசித்தரான போஸ் என்பவர் ஹிந்துமதமும் அத்வைத மதமும் ஒன்று என்று பிரமித்து இவ்வாறு எழுதியுள்ளார்:—

(1) A Hindu philosophy is pessimism It begins with a recognition of human sorrow, goes out in vain in quest of a proper remedy and ultimately arrives at annihilation as the goal where human misery terminates only in the extinction of life.

*Hindu philosophy of Bose.*

(2) It must be clear to everyone who has mastered the frame work of the true Vedanta philosophy, as I have tried to explain it, that there is but little room in it for Psycology or Cosmology nay even for Ethics.

MAX MULLER K. M.

(3) The new school (Adwaita philoshophy) calls the whole universe, in fact all that is visible and perceptible-Maya (illusion) in the sense that it never existed does not exist now and never exists. His maya is inexplicale. It is the argument of one in darkness himself. The new Vedantic thought has done and is doing more harm to the world than any other religious theory. It is a worse delusion than the delusion of Maya. Edward B. WARMAN M. A.

(தொடரும்)



## இந்த கிரஹண உபவாஸ ஸம்பந்தமான
## பிரமாண பரிசீலனை.

சென்ற 19—1—35உயில் ஏற்பட்ட சந்திரகிரஹணத்திற்கு அன்று பகல் முதல் யாமத்தில் போஜனம் செய்தது சாஸ்திரீயமா செய்யாதது சாஸ்திரீயமா என்பதை நாம் வியக்தமாய்ச் சொல்ல பல பிரசினங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. எல்லோரும் ஸுலபமாய் அவரவர்களே தெரிந்து நிச்சயித்துக்கொள்ளும்படி நமக்குத் தெரிந்த இருகக்ஷி பிரமாணங்களையும் எடுத்துக்காட்டியிருக்கிறோம். சுருங்கச் சொல்லின் சந்திரகிரஹணம் ஸம்பூர்ண கிரஹணமாயிருந்தால் அன்று பகலில் போஜனம் கூடாதென்று பிரமாணமிருப்பதாய் ஒருவரின் அபிப்பிராயம். அது பூர்ணமாயிருந்தாலும் சரியே பாதியாயிருந்தாலும் சரியே, கிரஹணம் சந்திர கிரஹணமாயிருந்தால் மூன்று யாமங்கள் தான்போஜனம் செய்யலாகாதே ஒழிய வேறு விதமாய் எண்ண இடமில்லையென்று பலரின் அபிப்பிராயம், இருகக்ஷியாரின் பிரமாணங்களாவன,—

(1) நிர்ணய ஸிந்து "தத்ரசந்த்ர க்ரஹணே யஸ்மின் யாமே க்ரஹணம் தஸ்மாத் பூர்வம் ப்ரஹரத்ரயம் நபுஞ்ஜீத। ஸூர்யக்ரஹேது ப்ரஹர சதுஷ்டயே நபுஞ்ஜீத। ஸூர்ய க்ரஹேது நாச்னீயாத் பூர்வம் யாமசதுஷ்டயம்। சந்த்ரக்ரஹேது யாமாம்ஸ்த்ரீன் பால வ்ருத்தாதுரைர்வினா। இதி மாதவீயே வ்ருத்தகௌதமோக்தே:। க்ரஹணம்துபவேதிந்தோ: ப்ரதமாதபியாமத:। புஞ்ஜீத ஆவர்த்தனாத் பூர்வம் ப்ரதமே ப்ரதமாதத: இதி மார்க்கண்டேயோக்தேஸ்ச।" இதன் அபிப்பிராயமாவது:— சந்திரகிரஹணம் ஏற்பட்டால் எந்த யாமத்தில் கிரஹணம் பிடிக்கிறதோ அந்த யாமத்திற்கு முந்தி மூன்று யாமங்கள் போஜனம் செய்யலாகாது,

சூரிய கிரஹணத்தில் நான்கு யாமங்கள் போஜனம் செய்யலாகாது. ஏனெனில் சூரிய கிரஹணத்தில் நான்கு யாமங்கள் முந்தி போஜனம் செய்யலாகாது என்றும் சந்திரகிரஹணத்தில் மூன்று யாமங்கள் போஜனம் செய்யலாகாது என்றும் அந்த விதி பையன்கள் வயோதிகர்கள் வியாதியஸ்தர்கள் இவர்களைப் பொருத்ததல்லவென்றும், மாதவீய தர்ம சாஸ்திரத்தில் விருத்த கௌதமரின் வாக்யம் காணப்படுகிறது. இரவு முதல் யாமத்திற்கு மேற்பட்டு சந்திரகிரஹணம் ஏற்பட்டால் அன்று பகலில் சூரியன் திரும்புவதற்கு முன் அதாவது இரண்டாவது யாமம் முடியுமுன் போஜனம் செய்யவேண்டும் என்றும் இரவு முதல் யாமத்தில் பிடித்தால் அன்று பகலில் முதல் யாமம் முடியும்முன் போஜனம் செய்யவேண்டுமென்றும், மார்க்கண்டேய வசனமும்கூட இருந்து வருகிறது.

(2) தர்ம ஸிந்து "அத வேதவிசார: சூர்யக்ரஹே க்ரஹண ப்ரஹாரதர்வாக் யாமசதுஷ்டயம் வேத:। சந்த்ரக்ரஹேது ப்ரஹாரத்ரயம்। ததாச தினப்ரதம ப்ரஹரே சூர்யக்ரஹே பூர்வ ராத்திரி ப்ரஹர சதுஷ்டயே நபோக்தவ்யம், த்விதியே யாமே க்ரஹணே ராத்ரித்விதிய யாமாதௌ நபோக்தவ்யம்। ஏவம் ராத்ரிப்ரதம ப்ரஹரே சந்திரகிரஹே தினத்விதீய யாமாதௌ ந புஞ்ஜீத। ராத்ரி த்விதீய யாமாதௌ க்ரஹணே தினத்ருதீய யாமாதௌ ந புஞ்ஜீத।" கேசித்து சந்திரபூர்ண மண்டலக்ராஸே யாம சதுஷ்டயம் வேத: ஏகதேசக்ராஸே யாமத்ரயமித்யாஹு:" இதின் அர்த்தமாவது:—கிரஹண உபவாஸத்தைப்பற்றி சொல்லப்படுவதாவது. சூர்ய கிரஹணத்தில் கிரஹணம் பிடிக்கும் யாமத்திற்குமுன் நான்கு யாமங்கள் வேதம். சந்திரக்கிரஹணத்திற்கு மூன்று யாமங்கள் வேதம். ஆதலால் பகல் முதல் யாமத்தில் சூரிய கிரஹணமானால் முதல் நாள் இரவு நான்கு யாமங்களும் போஜனம் செய்யலாகாது. இரவு இரண்டாவது யாமத்தில் கிரஹணம் பிடித்தால் முதல் நாள் இரவு இரண்டாவது யாமத்தில் போஜனம் செய்யலாகாது. இப்படி இரவு முதல் யாமத்தில் சந்திரகிரஹணமானால் அன்று பகல் இரண்டாவது யாமத்தில் போஜனம் செய்யலாகாது. இரவு இரண்டாவது யாமத்தில் சந்திர கிரஹணமானால் அன்று பகல் மூன்றாவது யாமத்தில் போஜனம்



கூடாது. ஒரு சிலர் சந்திரனின் பூர்ண கிரஹணமாயிருந்தால் நான்கு யாமங்கள் வேதமென்றும் ஏகதேச க்ரஹணமாயிருந்தால் மூன்று யாமங்கள் வேதமென்றும் சொல்கின்றனர்.

(3) சலாரி நாராயணாசாரியாரின் குமாரர் சலாரி நரஸிம்ஹாசார்யார் செய்த ஸ்மிருத்யர்த்த ஸாகரம் சந்திரகிரஹே கிரஹண ஹாக்ஷணாத் பூர்வம் ப்ரஹரத்ரயமத்யே நபுஞ்ஜீத। சூர்ய கிரஹணே து யாம சதுஷ்டயம், சந்த்ரஸ்யக்ரஸ்தோதயே து ஸம்பூர்ண மஹர் நபுஞ்ஜீத ஸர்வக்ராஸே உபவாஸ இத்யத்ர ப்ரதம யாம க்ரஹணே அஹர் நபோஜனம் கார்யமித்யத்ர ச மூலப்ரமாணம் சிந்த்யம்" இதன் தாத்பரியமாவது:— சந்திரகிரஹணம் பிடிக்கும் யாமத்தின் முன் ஒரு க்ஷணம் முதல் மூன்று யாமங்கள் போஜனம் செய்யலாகாது. சூரிய கிரஹணமாயிருந்தால் நான்கு யாமங்கள் கூடாது. சந்திரோதயம் ஆகும்பொழுதே கிரஹணமாயிருந்தால் அன்று பகல் முழுவதும் போஜனம் கூடாது. ஸம்பூர்ண கிரஹணமாயிருந்தால் உபவாஸம் செய்யவேண்டுமென்று சொல்வதிலும் முதல் யாமத்தில் கிரஹணமாயிருந்தால் பகல் போஜனம் கூடாதென்று சொல்வதிலும் மூலப்ரமாணமில்லை. அது யோசிக்கத்தகுந்ததாயிருக்கிறது.

(4) சலாரி நரஸிம்ஹாசாரியாரின் நிஜ சிஷ்யரான சலாரி சேஷாசாரியார் இயற்றிய நிர்ணயரத்னம்.

"தத்ரயஸ்மின்யாமே சந்திர கிரஹணம் தஸ்மாத் பூர்வம் ப்ரஹரத்ரயம் நபுஞ்ஜீத। சூர்யக்ரஹேது ப்ரஹர சதுஷ்டயம் நபுஞ்ஜீத॥ ஸூர்யக்ரஹேது நாச்னீயாத் பூர்வம் யாம சதுஷ்டயம்। சந்த்ரக்ரஹேது யாமாந்த்ரீன் பாலவ்ருத்தாதுரைர்வினா இதிமாதவியே। க்ரஹணம் து பவேத் இந்தோ: ப்ரதமாத் அதி யாமத: புஞ்ஜீத ஆவர்த்தனாத் பூர்வம் ப்ரதமே ப்ரதமாதத: இதி மார்கண்டேயே॥ இதன் அபிப்பிராயமாவது எந்த யாமத்தில் சந்திரகிரஹணமோ அதற்குமுன் மூன்று யாமங்கள் போஜனம் செய்யலாகாது. சூரியகிரஹண காலத்தில் நான்கு யாமம் போஜனம் கூடாது, என்று மாதவீயத்திலுள்ள விருத்த கௌதமரின் வாக்யத்தையும் மார்கண்டேய புராண வாக்யத்தையும் சொல்லி நிர்ணயித்துள்ளவை பின்பற்றியிருக்கிறார்.

(5) ஸ்மிருதி த்ரிகாண்ட மீமாம்ஸா: யஸ்மின்யாமே சந்திர கிரஹணம் தத: பூர்வம் யாமத்ரயமத்யே நபோக்தவ்யம்॥ சூர்ய க்ரஹேது தத: பூர்வம் யாம சதுஷ்டயம் நபோக்தவ்யம் ததா சோக்தம் பாரதே, அர்வாக்யாமத்ரயாதிந்தோ: க்ரஹணே புஞ்ஜிமாசரேத்॥ சதுர்யாமாததஸ்சைவ ராகுக்ரஸ்தே திவாகரே இதி”. இதன் அபிப்பிராயமாவது சந்திரகிரஹணம் பிடிக்கும் யாமத்திற்கு முந்தி மூன்று யாமத்திற்குள் போஜனம்கூடாது. சூர்ய கிரஹணமாயிருந்தால் முந்தி நான்கு யாமத்திற்குள் போஜனம் கூடாது என்று சொல்லி மேலே சொல்லிய பிரமாணங்களுடன் மகாபாரத ப்ரமாணமும் இதற்கு ஆதாரமாக கூறப்பட்டிருக்கிறது.

(6) ஸமயமயூகம் இதிலும் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது.

(7) வைத்தினாத தீக்ஷிதீயம் இவ்வாறே சொல்லப்பட்டு மார்கண்டேய வாக்யத்திற்கு தெளிவான அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது.

(8) காலமாதவீயம் “யத்து ஸ்காந்த வசனம், பூர்வம் நிசிதாத்க்ரஹணம் யதா சந்திரஸ்யவைபவேத்॥ ததா திவாநகர்தவ்யம் போஜனம் சிகிவாகன இதி॥ ததிதம் யாமத்ரயவ்யவதானுபிப்ராயம்॥ சந்திரக்ரஹேது யாமான்த்ரீன் ஸூர்யேயாம சதுஷ்டயம்॥ இதி விசேஷஸ்ய கௌதமேன அபிதானுத்॥ வாராகபுராணே, யதி சந்த்ரோபராகஸ்யாத் ததேதஸ்யாம் திதௌதரே॥ க்ரஹணாத் பூர்வமேவத்ரீன் யாமான்ஹித்வா து போஜனம்॥ பூர்ணார்த்தபாதக்ராஸேபி புக்த்வாஸ்நானம் ஸமாசரேத்॥ ஜபச்ராத்தாதிகம் குர்யாத் நாத்ரகார்யாவிசாரணா॥ இதிதாரா தேவிம்ப்ரதி வராகோக்தேஸ்ச”॥ இதன் தாத்பரியமாவது. மத்ய இராத்திரிக்கு முன்பு சந்திரகிரஹணம் ஏற்பட்டால் ஹே மயில்வாகனை ஸுப்ரம்மண்யா! அன்று பகல் போஜனத்தை செய்யலாகாது என்று ஸ்காந்த புராண வசனம் எது உண்டோ அது கிரஹணத்திற்கு முந்தி மூன்று யாமங்களில் பகல் போஜனம் செய்யலாகாதென்பதை நிச்சயம் செய்யகூடியதாகும். ஏனெனில் சந்திரகிரஹணத்திற்கு மூன்று யாமமும் சூர்ய கிரஹணத்திற்கு நான்கு யாமமும் விடவேண்டுமென்று கௌதமர் விசேஷத்தைச் சொல்லியிருக்கிறார்.



தவிரவும் வராக புராணத்தில் சந்திரகிரஹணம் ஏற்பட்டால் அந்த நாளில் க்ரஹணத்திற்கு முன்பு அந்த கிரஹணம் பூர்ண கிரஹணமாயிருந்தாலும் சரியே அர்த்த கிரஹணமாயிருந்தாலும் சரியே பாதக்ரஹணமாயிருந்தாலும் சரியே போஜனம் செய்துவிட்டு கிரஹணப்ரயுக்தமான ஜபம் தேவதார்ச்சனை சிராத்தாதிகளைச் செய்யவேண்டும். இதில் யோசனை வேண்டாம் என்று பூதேவியைப்பார்த்து ஸ்ரீவராகமூர்த்தி சொல்லியிருக்கிறார்.

(9) பராசரமாதவீயம் இதிலும் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது.

(10) சந்திரகிரஹணத்தில் பகல் போஜனத்தை நிஷேதித்து மோக்ஷமான பின்பு போஜனம் செய்யச்சொல்லும் பிரமாணங்களெல்லாம் கிரஸ்தோதய விஷயமென்றும் அதாவது சந்திரன் உதயமாகும்பொழுதே கிரஹணம் பிடித்தால் செய்யவேண்டியதைக் குறிப்பதாயும் சந்திரகிரஹணத்தில் முதல் யாமத்தில் போஜனம் தகாது என்று நிஷேதிக்கும் எல்லா ப்ரமாண வாக்யங்களும் கிரஹண யாமத்திற்கு முன்பு மூன்று யாமங்களில் போஜனம் செய்யலாகாதென்று தடுப்பதாயும் அறிய வேண்டியதென்றும் பிரசித்தரான தர்ம சாஸ்திரகாரர்கள் அபிப்பிராயப்பட்டிருப்பதாய் கிரந்த கர்த்தாவின் பெயர் தெரியாத கிரஹண விசாரம் என்ற ஓர் ப்ராசீன நூல் அறிவிக்கிறது. பகலில் போஜனம் செய்யலாகாதென்று கூறுகிறவர்கள் அடியிற்கண்ட பிரமாணத்தை ஆதாரமாய் கொண்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

“சலாரி நாஸிம்ஹாசாரீய கிருத க்ரஹண நிர்ணயே:—க்ரஹணம் கண்டா கண்டத்வேன த்விவிதம் தத்ரஸூர்யக்ரஹே உபயவிதேபி க்ரஹணயாமாத் பூர்வம் யாம சதுஷ்டயம் வேத:॥ சந்த்ரக்ரஹே அகண்டே யாம சதுஷ்டயம் வேத: கண்டேது யாமத்ரயம் வேத:॥ (1) ததுக்தம் மூக்தாவல்யாம், க்ரஹயாமாதத: பௌரே: நாத்யாத்யாம சதுஷ்டயம்॥ சந்த்ரேப்யேவம் ஜகு: பூர்ணே கண்டே யாமத்ரயம்புதா: இதி........ (2) ஸர்வக்ராஸோபவேத் இந்தோ அர்த்தராத் ராததஸ்தனே॥ திவாசைவ நபோக்தவ்யம் மோக்ஷாது பரிபோஜனம்॥” இதன் தாத்பரியமாவது சலாரி நாஸிம்ஹாசாரியார் இயற்றிய கிரஹண நிர்ணயம் என்னும்

டாடப்பட்டதென்றும் 7-2-35-உ யன்று ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி தேவாலயத்தில் மாத்வர்களின் வித்யாபிவிருத்திக்காகவென்று ஓர் பாடசாலை வீராஜமங்கலம் ஸ்ரீமான் லக்ஷ்மிநரஸிம்மாசாரியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதென்றும் காரியதரிசி ஸ்ரீமான் C. V. சுப்பராவ் அறிவிக்கிறார்.

மதுரையைச்சேர்ந்த மாம்பலத்தில் 12—2—35-உ யன்று வழக்கப்படி ஸ்ரீமத்வ நவமி வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் அன்று காலை 7 மணிக்கு ஸ்ரீபகவத்பாதாளின் உருவப்படம் அலங்காரம் செய்யப்பட்டு மேளதாளத்துடனும் மத்வவிஜய பாராயணத்துடனும் பஜனைகோஷ்டியுடனும் முக்யமான தெருக்கள் வழியாய் ஊர்வலமாய் கொண்டுபோகப்பட்டதென்றும், ஸ்ரீமான்களான கோபிநாதாசாரியார் அவர்களாலும் வைய்யூர் ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்களாலும் அன்று காலையிலும் மாலையிலும் ஆசாரியாளின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும் உபதேசத்தைப்பற்றியும் உபன்யாஸங்கள் நடந்ததென்றும், மத்யானம் ஆராதனமும் அலங்காரபக்தியுடன் பிராம்மணஸந்தர்ப்பணையும் நடந்த தென்றும் இவ் வருஷம் திருப்பதி ஸ்ரீ மதுஸூதன தீர்த்தஸ்வாமிகள் இங்கு விஜயம் செய்து எல்லோரையும் அனுக்ரஹித்தது நற்பாக்யமென்று ஸ்ரீமான் A. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் ஸ்ரீமத்வாஸித்தாந்த புபுத்ஸூஸபையின் ஆதரவில் நாளது-ஞ ஜனவரி-மாஸம் 20-உ யன்று ஸ்ரீமான் P. G. வெங்கட சுப்பய்யா அவர்களால் பகவத் ப்ரார்த்தனா விதானம் என்னும் விஷயமும் 27-உ யன்று ரிடையர்ட் தாசில்தார் ஸ்ரீமான் T. K. ஸ்ரீனிவாஸராவ் அவர்களால் தாரதம்யம் என்னும் விஷயமும் 10-உ யன்று ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணாசாரியார் அவர்களால் வேத அபௌருஷேயத்தைப்பற்றியும் உபன்யசிக்கப்பட்டதென்றும் 11, 12, 13 தேதிகளில் ஸ்ரீமத்வநவமி மகோற்சவம் கொண்டாடப்பட்டதென்றும் 11, 12-உ களில் ஸ்ரீமான் தெக்களூர் கிருஷ்ணாசாரியார் அவர்களால் ஸ்ரீமத்வாசாரியாருடைய சரித்திரமும் அவருடைய கிரந்தங்களின் கருத்துரையும் அழகாய் உபன்யசிக்கப்பட்டதென்றும் 12-உ ஆஞ்சநேய ஸ்வாமிக்கு பஞ்சாமிருத அபிஷேகமும் 13-உ ஸ்ரீமான்களான பிடில் இரங்காசாரியாரும் வியாஸராவும் பக்கமேளங்களுடன் மிகவும் நேர்த்தியாக பஜனை செய்தனரென்றும் 6—2—35 முதல் 23—2—35 வரையில் தினம் ஒரு ஸர்கமாய் காலையில் ஸ்ரீமான் தெக்கலூர் கிருஷ்ணாசாரியார் ஸ்ரீமத்வவிஜயம் அர்த்தம் சொல்லி வருகிறாரென்றும், 24-உ யன்று ஸ்ரீமத்வ விஜயத்தின் மங்களோற்சவம் நடத்தப்படுமென்றும் இரவில் ஸ்ரீமான் அவலக்கி ஸ்ரீனிவாஸாசாரியார் மாகமாகாத்மியத்தைச் சொல்லிவருகிறாரென்றும் காரியதரிசி ஸ்ரீமான் P. G. வெங்கடசுப்பய்யா அறிவிக்கிறார்.

நமது நகர் வியாஸராயர் அக்கிரஹாரத்தில் வழக்கப்படி இவ்வருஷமும் ஸ்ரீமான் பிடில் பார்த்தசாரதி ராயர் அவர்களால் ஸ்ரீ புரந்தரதாஸர் புண்ய தினம் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும், 2—2—35௳ யன்று ஸ்ரீமான்களான மகாராஜபுரம் விசுவநாதய்யர் வாய்ப்பாட்டு, ராஜமாணிக்கம் பிள்ளை பிடில், கோதண்டராமய்யர் மிருதங்கம், கண்டனூர் பங்காருசாமி அய்யர் கிஞ்சிரா இவர்களுடன் கூடிய பிரபலமான ஓர் சங்கீதகச்சேரி நடத்தப்பட்டதென்றும் புரந்தரதாஸர் பதங்களே அதிகமாயும் வாஸுதேவநெனது என்ற பதமே பல்லவியாகவும், வெகு சிலாக்யமாய் பாடப்பட்டதென்றும் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனரென்றும், மறுநாள் புண்ணியதினத்தன்று பகலில் பஜனை கோஷ்டியுடன் உஞ்சவிருத்தியும் மத்யானம் பிராம்மண ஸந்தர்ப்பணையும் இரவில் ஸ்ரீமான்களான ஜயராமய்யர் பிடில் கணேசய்யர் மிருதங்கம் இவர்களுடன் பில்லாங்குழல் நாகராஜராவ் அவர்களின் வேணுகான கச்சேரியும் நடத்தப்பட்டதென்றும் நமது நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத்வ ஸித்தாந்த சபையின் த்விதீய ஸம்வத்ஸரோத்ஸவப்ரகடனப் பத்திரிகையிலிருந்து இதுவரை 61 உபன்யாஸங்களும் 3 ஹரிகதைகளும் 12 அமாவாசை பஜனைகளும் நடத்தப்பட்டிருக்கின்றனவென்றும் 1—2—34 முதல் 31—12—34 வரையில் ரூ. 91-1-11 வரவு என்றும் ரூ. 81-3-5 சிலவு என்றும் அதில் ரூ. 62-8-0 வித்வான்களுக்கு சம்பாவனை செய்யப்பட்டிருக்கிறதென்றும் ரூ. 9—14—6 கையிருப்பு இருப்பதாயும் தெரியவருவதுடன் 10—2—35௳ வரையில் ஸ்ரீமான் சதுர்வேதியநாதாசாரியாரவர்களால் 6-வது அத்யாயம் பகவத்கீதை உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் 1—2—35௳ யன்று இச்சபையின் மெம்பர் ஸ்ரீமான் பாளையம் சுப்பராயர் கிருகத்தில் பீமனகட்டம் அச்யுதப்ரேக்ஷதீர்த்த மடம் ஸ்வாமிகளுக்கு பிக்ஷையளிக்கப்பட்டதென்றும் 12௳ ஸ்ரீமத்வ நவமியன்று சித்திரவீதி தென்மேற்கு மூலையிலுள்ள ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு காலையில் அபிஷேகம் ஆராதனை பாராயணமும் மாலை $3\frac{1}{2}$-மணிக்கு ஸ்ரீமான் யதுநாதாசாரியாரால் ஆசாரிய சரித்திரத்தைப்பற்றி உபன்யாஸமும், $6\frac{1}{2}$-மணி முதல் பிடில் வித்வான் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யரால் பிடில் கச்சேரியும் பிறகு வருஷாந்தரிபோர்டு படிக்கப்பட்டு மத்வவிஜய பாராயணம் செய்தவர்களுக்கு பரிசு அளித்ததுடன் சபையின் த்விதீயஸம்வத்ஸரோத்ஸவக்கொண்டாட்டம் நடைபெற்றதென்றும் காரியதரிசி ஸ்ரீமான் M. S. பத்மநாபராவ் அறிவிக்கிறார்.

நமது பத்திரிகாலயமாகிய இப்பத்திராதிபர் ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியாரின் கிருகத்தில் 10—2—35௳ பீஷ்மாஷ்டமியன்று அவருடைய பிதா மஹரும் குருவுமாகிய ஸ்ரீமான் பாரதாசாரியார் என்று மிக்க ப்ரஸித்தரான ஸ்ரீபாகவத சாமண்ணாசாரியார் அவர்களின் ஆராதனையும் 11௳ யன்று ஜகத் குருவான ஸ்ரீபகவத் பாதாளின் ஆராதனையும் விசேஷமாய் நடத்தப்பட்டதுடன் முலுபாகலுமடத்தின்

ஓர் பிரிவாய் ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் குருவான ஸ்ரீ வாதராஜஸ்வாமிகள் பூஜை செய்யப்பட்டுவந்த ஸ்ரீரங்க விட்டலரென்று சொல்லப்பட்டுவரும் பரமஸுந்தர விக்ரஹம் ஆராதிக்கப்பட்டுவருவதாயுள்ள வாடப்பள்ளி மடத்தின் ஸ்வாமிகளான ஸ்ரீ குருபக்தி நிதிதீர்த்த ஸ்வாமிகள் இச்சமயம் விஜயம் செய்திருந்து பஞ்சாமிருதாபிஷேகம் மத்வவிஜய பாராயணம் பிராம்மண சந்தர்ப்பணை முதலியவைகளை நடத்தி ஸ்ரீமத்வ நவமி மஹோத்சவத்தை பூர்த்திசெய்து பரமானுக்ரஹம் செய்தது மெச்சத் தகுந்ததாயிருக்கிறது.

திருச்சி ஸ்ரீமன் மத்வஸித்தாந்த சபையின் 14-வது வருஷத்திய ஆரம்பதினக் கொண்டாட்டமும் ஸ்ரீமத்வநவமி மஹோத்சவமும் 12உ முதல் மூன்று நாட்கள் நடத்தப்பட்டதென்றும் மத்வநவமியன்று மத்தியானம் ஸ்ரீமத்வ விஜயபாராயணம் தேவபூஜை முதலியவைகளும் அலங்கார பங்க்திபோஜனத்துடன் பெரியதொரு ப்ராம்மண சந்தர்ப்பணையும் மாலையில் கும்பகோணம் ஸ்ரீமான் ஜி. பூவராகாசாரியாரால் ஸ்ரீபகவத்பாதாளின் சரித்திரமும் உபதேசமும் என்பதைப்பற்றி உபன்யாஸமும் 13உ யன்று, இந்நகருக்கு இதுவரை வாராதிருந்த மதராஸ் ஸ்ரீமான் M. ராஜாராயர் அவர்களால் துரௌபதி மானஸம்ரக்ஷணம் ஹரிகதையும் 14உ யன்று ஸ்ரீமான் தெக்கலூர் வெங்கடரமணதாஸர் அவர்களால் ருக்மாங்கத சரித்திரம் ஹரிகதையும் நடத்தப்பட்டதென்றும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஜனங்கள் ஏராளமாய் வந்திருந்தனரென்றும் காரியதரிசி ஸ்ரீமான் C. R. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

சேலம் ஜில்லா ஆத்தூரில் இவ்வருடம் ஸ்ரீமத்வநவமி மஹோத்சவம் சிறப்பாய் நடத்தப்பட்டதென்றும் இங்குள்ள ஆஞ்ஜனேயஸ்வாமி தேவாலயங்களில் 12உ யன்று பஞ்சாமிருதாபிஷேகாதிகள் நடத்தப்பட்டனவென்றும் மாலையில் இவ்வூர் வக்கீல் ஸ்ரீமான் S. பூவராகமூர்த்தி ஆசாரியார் B. A., B. L. அவர்களால் ஸ்ரீபகவத் பாதாளின் மகிமையைப் பற்றி அழகாய் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் இதற்கு இவ்வூரிலுள்ள எல்லா மாத்வர்களும் இதர மதஸ்தர்களும் ஏராளமாய் வந்திருந்தனரென்றும் கல்லாநத்தம் கர்ணம் ஸ்ரீமான் T. S. குருராஜராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீ முளுபாகலு மடாதிபதி ஸ்ரீ ஸுஜ்ஞாநிதிதீர்த்தர் சிஷ்யரான ஸ்ரீ ப்ரஜ்ஞாநிதிதீர்த்த ஸ்வாமிகள் அனந்தசயன யாத்ராக்ரமத்தில் திருநெல்வேலிக்கு விஜயம் செய்திருந்து மாத்வா அஸோஸியேஷன் ஆதரவின்கீழ் திருநெல்வேலி டவுன் உத்திராதி மடத்தில் 16—1—35உ யன்று பக்தி 17உ வைராக்யம் வீரராகவபுரம் ஸ்ரீமான் ஜகந்நாதராவ் வீட்டில் 20உ காமாதிசத்ரு நிக்ரஹம் 21உ ஸ்ரீ ஹனுமார் கோயிலில் கர்மயோகம் 24உ பாரி அண்டு கோ மானேஜர் ஸ்ரீமான் B. நரஸிம்மராவ் வீட்டில் த்வைதாத்வைதவிசாரம் இவைகளைப்பற்றி கன்னடத்தில் அழகாய் உபன்யாஸம் செய்தார்களென்றும் வீரராகவபுரம் தெற்குவீதி ஸ்ரீ ஆஞ்ஜனேயஸ்வாமி தேவாலயத்தில் பிராம்மண ஸந்தர்ப்பணை முதலியவைகளுடனும் ஸ்ரீபகவத்பாதாள் படத்தை வீதிப்புறப்பாட்டுடனும்



ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியாசாரியார் அவர்களால் மத்வஸித்தாந்தம் என்பதைப்பற்றி உபன்யாஸத்துடன் ஸ்ரீமத்வநவமி உற்சவம் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் காரியதரிசி வக்கீல் ஸ்ரீமான் நரஸிம்மராவ் அறிவிக்கிறார்.

கரூரைச்சேர்ந்த ஆண்டாங்கோயிலில் வழக்கப்படி ஸ்ரீமத்வநவமி மஹோத்சவம் விசேஷமாய் கொண்டாடப்பட்டதென்றும் ஸ்ரீ ஆஞ்ஜனேயருக்கு சோமவாரம் காலை பல்லக்கும் இரவில் குதிரை வாகனமும் மாலை கோயமுத்தூர் ஸ்ரீமான் அவலக்கி ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்களால் ஸ்ரீமத்வாசாரியார் சரித்திரம் விஷயமாய் உபன்யாஸமும் மத்வநவமி மங்களவாரம் காலை வேதபாராயணங்களுடன் ரதோத்சவம் மத்யானம் சுமார் 1500 பேர்களுக்கு பிராம்மண போஜனம் இரவு சோசலை ஸ்ரீமான் வெங்கடேசதாஸராவ் ப்ரஹ்லாத சரித்திரம் ஹரிகதை புதவாரம் காலை பல்லக்கும் இரவில் புஷ்பப்பல்லக்கும் மாலை சோசலை ஸ்ரீமான் கிருஷ்ணநரஸிம்மாசாரியாரால் உபன்யாஸம் ஹரிபஜனை தினம் ப்ராம்மண ஸந்தர்ப்பணைகளும் அநேகர் வெளியூரிலிருந்து விஜயம் செய்திருந்தனரென்றும் ஸ்ரீமான் K. நாராயணாசாரியார் அறிவிக்கிறார். ஸ்ரீரங்கம் மாத்வா கல்சுரல் அஸோஸியேஷனின் ஆதரவில் ஸ்ரீமத்வநவமியை முன்னிட்டு ஸ்ரீமான்களான சதுர்வேதியநாதாசாரியார், காபேஹயக்ரீவாசாரியார் கும்பகோணம் G. பூவராவாசாரியார் இவர்களால் 10, 11, 13உ களில் முறையே உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் 13உ யன்று கோயில் யானையின்மீது ஸ்ரீபகவத் பாதாளின் படத்தைவைத்து மத்வ விஜய பாராயணம் வேதபாராயணம் பஜனைகோஷ்டி இவைகளுடன் சிறப்பாய் ஊர்வலம் நடத்தப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீரங்கத்தில் விஜயம் செய்திருக்கும் ஸ்ரீ பீமனகட்டே ஸ்வாமிகளுக்கு ஸ்ரீமத்வநவமி யன்று ஸ்ரீமான் T. C. ரங்கநாதராயரால் பெரியதொரு பிக்ஷையும் 15உ புஷ்பப்பல்லக்கு ஊர்வலமும் நடத்தியதுடன் பிரதி வருஷமும் ஸ்ரீமத்வநவமி ஆராதனைக்காக வென்று ரூ. 50-0-0 அளிப்பதாய் பிரசித்தப்படுத்தினாரென்றும் 14உ ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் ஸ்ரீமான் G. பூவராகாசாரியாரால் உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் நமது நிருபர் அறிவிக்கிறார்.

நமது நகர் ஸ்ரீ சக்கரபாணிஸ்வாமி கீழவீதி ஆஞ்ஜனேய விலாஸத்தில் ஸ்ரீமத்வநவமியை முன்னிட்டு 11உ யன்று 16 பேர்களைக்கொண்டு 16 ஸர்க்கம் மத்வவிஜயம் 16 தடவை பாராயணம் செய்யப்பட்டு பிராம்மண ஸந்தர்ப்பணை நடந்தது குறிப்பிடத்தகுந்ததாயிருக்கிறது.

## ஆஸ்திகமித்திரன்.

பவரோக வைத்தியம் என்ற பெயருடன் வெளிவந்த அநேக அபூர்வ விஷயங்கள் அடங்கிய இப்பத்திரிகை இப்பால் ஆஸ்திக மித்திரன் என்ற பெயர்கொண்டு இப்பால் 1—10—34 முதல்

# மார்த்வமித்திரன்.

[illegible]ஷ மாதம் 1உயில் மாதப்பத்திரிகையாய் [illegible]தசகாண மிகவும் சந்தோஷப்படுகிறோம். தற்கால மதசவர்த்தமானங்களில் வடதேசங்களில் அநேக ஸநாதன தர்ம பத்திரிகைகள் பிரசுரமாகி வருவதாயும் தமிழ் நாட்டில் அத்தகைய பத்திரிகைகள் மிகக் குறைவாய் இருப்பதோடு தமாஷ பத்திரிகைகளாய் இருப்பதாயும், அந்த குறையை நீக்க மஹாராஷ்டிரம், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், தமிழ் எல்லா பாஷைகளிலிருந்து பலவகை ஆஸ்திக ஸத் விஷயங்களை எடுத்துக்கூற இப்பத்திரிகை வெளியாயிருப்பதாயும் தெரியவருகிறது. இதன் ஆசிரியர் 20 வருஷகாலமாய் இந்தியா முழுமையும் பிரயாணம் செய்து அநேக பாஷைகளில் ஹரிகதை உபன்யாஸாதிகள் செய்து பிரசித்தி பெற்றவராதலால் இப்பத்திரிகை தன் நோக்கத்தை பூர்த்தி செய்துகொள்ளுமென்றே நம்புகிறோம். ஆஸ்திக மத அனுஸரணையான வியாஸங்கள் தவிர வேறெதுவும் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படமாட்டாதென்ற விளம்பரம் ஆஸ்திகர்களுக்கு குதூஹலத்தை உண்டுபண்ணுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. எமது நண்பரான இதன் ஆசிரியர் ஸ்ரீமான் V. கிருஷ்ண மூர்த்தி பாகவதர் அவர்களுக்கு ஸர்வேசன் எல்லாவகை ஆனுகூல்யத்தையும் மேன்மேலும் கொடுத்தருளும்படி பிரார்த்திக்கிறோம். வருட சந்தா ரூ. ஒன்று என்றும் தனிப்பிரதி அணா இரண்டு என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகை கிடைக்குமிடம்:— ஆஸ்திக மித்திரன் ஆபீஸ்,
தர்மபுரி, (சேலம்ஜில்லா).

## விசேஷ தினங்கள்.

பால்குண மாஸம்.

| | | |
|---|---|---|
| 15—3—35 | சுக்ரவாரம் | ஏகாதசி உப. |
| 16—3—35 | சனிவாரம் | த்வாதசி, ஹரிவாஸரம் மணி 8-15-க்கு மேல் பாரணை. |
| 19—3—35 | மங்களவாரம் | ஹோளி பண்டிகை, காமதகனம். |
| 20—3—35 | புதவாரம் | பௌர்ணமி, விஷ்ணு ப. உபவாஸம். |
| 23—3—35 | சனிவாரம் | ஸ்ரீவாதிராஜர் புண்ய தினம். |
| 24—3—35 | பானுவாரம் | ஸ்ரீவியாஸராஜர் புண்ணிய தினம், |
| 30—3—35 | சனிவாரம் | சிரவணம் உப. இல்லை, விஷ்ணு பஞ்ச[illegible] உபவாஸம் இல்லை. |
| 31—3—35 | பானுவாரம் | ஏகாதசி உபவாஸம், |
| 3—4—35 | புதவாரம் | அமாவாசை திலதர்ப்பணம், [illegible] உபவாஸம். |